கோவை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் ஆய்வு செய்த போது எடுத்த படம். மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார், மண்டல நிர்வாக ஆய்வாளர் சிவராசு, மேயர் கல்பனா, மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், துணை மேயர் வெற்றிச்செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.

திருவண்ணாமலையில் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நல உதவிகள் வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், சிவ.ஜெயராஜ், ஏ.ஏ.ஆறுமுகம், கற்பகம் சரவணன், ஹேமா சசிகுமார் உட்பட பலர் உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில்

இரண்டாம் கட்டமாக - கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், நவ. 12-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைதிட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, கடலூர் மாவட்டம், வடலூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ. அருண் தம்புராஜ், முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையினை வழங்கினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் சுயமாக முன்னேறும் வகையில் மகளிருக்கு இலவசப் பேருந்து பயணம் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஏதுவாக புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/- உரிமைத் தொகையாக வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னோடி திட்டமாக 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதல் கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும், மேற்சொன்ன இரண்டு கட்டங்களிலும், விடுபட்டவர்களுக்கு 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன. அதன்படி கடலூர் மாவட்டத்தில் இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள், உதவி மைய தன்னார்வலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் 1416 முகாம்கள் நடத்தப்பட்டு முதல்கட்ட முகாமில் 3,65,747 விண்ணப்பங்களும், இரண்டாம்கட்டமுகாமில் 2,20,378 விண்ணப்பங்களும், சிறப்பு முகாமில் 22,737 விண்ணப்பங்களும் ஆக மொத்தம் 6,08,862 (78.40%) விண்ணப்பங்கள் வரப்பெற்றது. வங்கி கணக்கு இல்லாத 13,860 நபர்களுக்கு கணக்கு துவங்குவதற்காக சிறப்பு முகாம்கள் 06.10.2023 முதல் 10.09.2023 வரைநடத்தப்பட்டதில் 8,061 நபர்களுக்கு இந்திய அஞ்சல் துறை மூலம் வங்கி கணக்கு துவங்கப்பட்டது. மேலும், 5,799 நபர்களுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் கணக்கு துவங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, கடலூர் மாவட்டத்தில் 15.09.2023 அன்று முதற்கட்டமாக 4,23,764 குடும்ப தலைவிகளுக்கும், நேற்று முன்தினம் (10.11.2023) இரண்டாம் கட்டமாக 22,148 குடும்ப தலைவிகளுக்கும் என மொத்தம் 4,45,912 குடும்ப தலைவிகள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை நேரடியாக வங்கி கணக்கில் பெற்று பயனடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்றஉறுப்பினர் கோ.ஐயப்பன், காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், கடலூர் வருவாய் கோட்டாட்சியர் ச.அதியமான் கவியரசு மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டையில் - தமிழ்நாடு அரசின்

இரண்டாம் கட்ட - கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட வங்கிக் கணக்குப் புத்தகம்!

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை நவ.12-

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தமிழ்நாடு அரசின் இரண்டாம் கட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கான வங்கி கணக்கு புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் தமிழ்நாடு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில் ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்குஅந்ததிட்டத்திற்கான வங்கிக் கணக்கு புத்தகத் தினை வழங்கினர்.

இதன் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டதாவது:-

ஆன்லைன் தடைச் சட்டத்திற்கு அரசாங்கம் சட்டம் இயற்றுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்பதை நீதிமன்றம் தெளிவாக சொல்லி உள்ளது. ஆனால் தமிழ்நாடு ஆளுநர் அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்று கூறியிருந்தார். நாங்கள் அவரிடம் எங்களுக்கு உரிமை உள்ளது என்பதை எடுத்துக் கூறியிருந்தோம். இந்நிலையில் இன்று நீதிமன்றம் கூறியதைப் போல் அரசு சட்டம் ஏற்றுவதற்கு உரிமை உள்ளது என்பதை உறுதிப்படுத்தி உள்ளது. இணைய வழி சூதாட்டம் ஒழுங்கு முறை படுத்துதல் தடை செய்தல் என்பதுதான் அந்த சட்டத்திற்கு பெயர். ஒழுங்குமுறை படுத்துவது என்பது எந்தெந்த விளை யாட்டுகளை எப்படி ஒழுங்கு முறைபடுத்த வேண்டும் அதற்கான குழுக்கள் அமைக்க வேண்டும் அந்த குழுக்களுக்கு மனுக்கள் போட்டு பரிசீலனை செய்து ஒழுங்குமுறைப்படுத்தி அந்த இணைய வழி விளையாட்டுகளை விளையாட அனுமதிக்க வேண்டும் என்பது முதலாவது கட்டம்.

சட்டத்துறை பரிசீலனை செய்யும்!

இரண்டாவது கட்டம் ரம்மி மற்றும் போகர். இந்த இரண்டு விளையாட்டுகளையும் தடை செய்ய வேண்டும். ஏனென்றால் அதில் பெரும்பாலான மக்கள் பணத்தை இழந்து தற்கொலைக்கு ஆளாகிறார்கள்.

ஆனால் நாங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்றவாறு அந்த வாதத்தை முன் வைக்கவில்லையோ என்று நாங்கள் நினைக்கிறோமே தவிர தீர்ப்பைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது, எங்களது வழக்கறிஞர்கள் வாதத்தை சிறப்பாக முன் வைத்திருந்தாலும் கூட நீதிபதி அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் வகையிலும் அவரை திருப்திப்படுத்தும் வகையிலும் கருத்துக்களை எடுத்து வைக்கவில்லையோ என்று எண்ணுவதைப் போல ஒரு தோற்றம்தான் வருகிறது தவிர வேறு எதுவும் கிடையாது.

தீர்ப்புகளைப் பற்றி விமர்சிக்கும் உரிமை எனக்கு கிடையாது. இந்த வழக்கில் மேல்முறையீடு செய்வது குறித்து சட்டத்துறை பரிசீலனை செய்யும். மேல் முறையீடு தேவை என்று சொன்னால் அதன்படி மேல்முறையீடு செய்வோம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.

மோசடிக் கும்பலுடன் பா.ஜ.க. நிர்வாகிகளுக்கு தொடர்பு?

அண்ணாமலைக்கு பணம் கொடுத்ததாக வெளியான ஆடியோ!

சேலம், நவ. 12-

சேலத்தில் அசோக சின்னத்தை தவறாக பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டு கைதான முத்துராமன், பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலையின் நடைபயணத்திற்கு பணம் கொடுத்ததாக கூறிய ஆடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

சேலத்தில் சில நாட்களுக்கு முன்பு ஒன்றிய அரசின் கடன் பெற்றுத் தருவதாக கூறி எம்.எஸ்.எம்.இ கவுன்சில் என்ற அமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் அந்த அமைப்பின் தேசியத் தலைவர் முத்துராமன், செயலாளரான பஞ்சாபைச் சேர்ந்த துஷ்யந்த் யாதவ், தமிழ்நாடு பிரிவு தலைவரான பா.ஜ.க. பிரமுகரும் நடிகையுமான நமீதாவின் கணவர் சவுத்ரி ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் நமீதாவும் பங்கேற்ற நிலையில், அசோக சின்னத்தையும் தேசியக்கொடியையும் தவறாக பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுவதாக புகார் எழுந்தது.

மேலும், எம்.எஸ்.எம்.இ அமைப்பில் மாநில தலைவராக பொறுப்பு கொடுப்பதாக கூறி, பணமோசடி செய்ததாக கோபால்சாமி என்பவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து, மோசடியில் ஈடுபட்ட முத்துராமன், துஷ்யந்த் யாதவ் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் நடை பயணத்திற்கு பணம் கொடுத்ததாக, கோபால்சாமியிடம் முத்துராமன் தெரிவிப்பது போன்ற ஆடியோ வெளியாகி உள்ளது. அதில், ஒன்றிய அமைச்சர் அலுவலகம் குறித்து பேசியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதனிடையே, சிறையில் உள்ள முத்துராமன், துஷ்வந்த் யாதவ் இருவரும் மகாராஷ்டிர மாநில ஆளுநர் மாளிகையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது போன்ற புகைப்படமும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் நலனில் முதல்வர் தனிக்கவனம்!

மானாமதுரையில் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை. நவ. 12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா மாங்குளம் ஊராட்சி மூங்கில்ஊரணியில் இலங்கைத் தமிழர்களுக்கான புதிய 188 புதிய குடியிருப்புகள் ரூபாய் 10 கோடியே 55 லட்சத்தில் கட்டப்படும் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர்கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

தமிழகத்தில் உள்ள முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் 5வது முறையாக முதல்வராக இருந்த பொழுது தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை சீரமைக்கவும் அவர்களின் குறைகளை நேரில் சென்று பார்வையிட்டு வருமாறு உத்தரவிட்டார் .அதற்காக அமைச்சர்கள் குழுவினை அமைத்தார் .அதில் நானும் இடம் பெற்றிருந்தேன் முன்னாள் அமைச்சர் சுப. தங்கவேலனும் அந்த குழுவில் இருந்தார்.

தமிழகம் முழுவதும் நாங்கள் நேரில் சென்று இலங்கை குடியிருப்பு அகதிகள் முகாமில் பார்வையிட்டு அங்கு செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து முதல் வர் கலைஞரிடம் அறிக்கை கொடுத்தோம்.

அந்த அறிக்கையை தலைவர் கலைஞர் பரிசீலித்து இலங்கை தமிழர்களுக்கான புதிதாக வீடுகள் கட்டுமாறு உத்தரவிட்டார் . அத்துடன் அவர்களது தேவைகளை செய்து தருமாறு உத்தரவிட்டார்.

பின்னர். ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் அ.தி.மு.க. ஆட்சியில் இலங்கைத் தமிழர்கள் கவனிப்பாரற்று இருந்தார்கள். தமிழர்கள் எங்கு எல்லாம் வாழ்கிறார்களோ அவர்களின் இதர சிம்மாசனத்தில் தலைவர் கலைஞர் இடம் பெற்றுள்ளார். மீண்டும் தளபதி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதும் இதே போல் இலங்கை தமிழர்கள் குடியிருப்பினை ஆய்வு செய்யுமாறு உத்தரவிட்டதன் பேரில் சிவகங்கை மாவட்டத்தில் ஒக்கூர் முகாமும் தற்பொழுது மூங்கில் ஊரணி முகாம் புதிதாக கட்டப்பட்டு விடுகிறது .188 வீடுகள் ரூபாய் 10 கோடியே 55 லட்சத்தில் புதிதாக அனைத்து நவீன வசதிகளுடன் கட்டப்பட உள்ளது.

இது தவிர இங்கு என்னென்ன தேவைகளோ அனைத்தும் செய்து தருமாறு முதல்வர். அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு இலங்கை தமிழர் வாழ்வில் தனி அக்கறை செலுத்துவதில் தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் அவர்கள் தனி கவனம் செலுத்தி வருகிறார்.

தமிழகத்தில் பிரதமர் வீடு திட்டம் கலைஞர் வீடு திட்டம் ருபாய் 2.50லட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது. ஆனால் இலங்கை தமிழர்களுக்கு குடியிருப்புகள் ரூபாய் 5 லட்சத்தில்கட்டப்படுகிறது.இது இரண்டு மடங்கு கூடுதல் நிதி ஆகும்.

இவ்வாறு தமிழகத்தை சிறந்த மாநிலமாக மாற்ற முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தீட்டி அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்துவருகிறார். இது தவிர வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வெளிநாட்டு வாழ் தமிழர்களுக்கான தனி துறையினை ஏற்படுத்தி அதன் அமைச்சராக செஞ்சி மஸ்தான் அவர்களை நியமித்துள்ளார்.

அவர்களின் குறைகளை கேட்டு தீர்த்து வருகிறார். இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் வர வேண்டும் என்று பல்வேறு வகையில் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வரும் முதல்வருக்கு மக்களாகிய அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, கடலூர் மாவட்டம், வடலூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.